Clear Copy

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 66/ந/2021
நாள். 20.01.2022

திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன்,
கடையநல்லூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி. – எதிர்மனுதாரர்

கடையநல்லூர், மேலகடையநல்லூர் பவுண்டு கீழத் தெரு, 3/9 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன் என்பவரின் 22.07.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.07.2021 அன்று பெறப்பட்டு, 66/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அவருடைய வாக்குமூலம் ஆகியவை கவனமாக பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

## ஆணை

கடையநல்லூர், மேலகடையநல்லூர் பவுண்டு கீழத் தெரு, 3/9 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன் என்பவர் கீழ்க்காணுமாறு தன் புகார்களை தெரிவித்துள்ளார்:-

கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் காலியாக இருந்த பணியிடங்கள் இரண்டு முறை நிரப்பப்பட்டன. ஆனால் இரண்டு முறையும் நகராட்சி அலுவலகத்தில் காலி பணியிடங்களை நிரப்புவது குறித்து மாண்பமை உயர்நீதி மன்றம் மற்றும் அரசு அறிவுறுத்திய வழிகாட்டு நெறிமுறைகள் கடை பிடிக்கப்படவில்லை. மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம், அரசு துறையில் காலிப் பணியிடங்களை நிரப்பும்போது வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருந்து பதிவு மூப்பு பட்டியல் பெறுவது மட்டுமில்லாமல் இரண்டு பத்திரிக்கைகளில் காலிப்பணிடங்கள் நிரப்புவது குறித்த விளம்பரம் செய்ய வேண்டும். அதில் ஒன்று அதிகம் படிக்கக்கூடிய வட்டார மொழி பத்திரிகையாக இருக்க வேண்டும். அவ்வாறு விளம்பரம் செய்து அதன் மூலம் வரும் விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்தும் பணி நியமனம் செய்ய வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. இது தொடர்பாக தமிழக அரசும் அரசாணை (நிலை) எண்.44 பணியாளர்

மற்றும் வேலை வாய்ப்பு (டி2) துறை நாள் 11.03.2015 ல் வெளியிட்டது. ஆனால் கடையநல்லூர் நகராட்சியில் இந்த அரசாணை கடை பிடிக்கப்படவில்லை. கடந்த 2018 ஆம் ஆண்டு, 20 துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் நிரப்புவது குறித்த விளம்பரம் மக்கள் குரல் என்ற நாளிதழிலும், இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், அலுவலக உதவியாளர் உட்பட பல்வேறு பணியிடங்கள் நிரப்புவது குறித்த விளம்பரம் மாலை தமிழகம் என்ற நாளிதழிலும் வெளியாகி உள்ளது. இந்த இரண்டு பத்திரிக்கைகளும் சாதாரணமாக யாரும் கண்டும், கேட்டுமிராத பத்திரிக்கைகளாகும். மாண்பமை உயர்நீதி மன்ற உத்தரவுப்படி மக்கள் அதிகம் படிக்கக்கூடிய வட்டார மொழி பத்திரிக்கைகளில் வேலை வாய்ப்பு குறித்த விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தால் இப்பகுதியில் தகுதியான பலருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கும். இதன் மூலம் கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் காலிப்பணியிடங்களை நிரப்புவதில் மாண்பமை உயர்நீதி மன்ற உத்தரவு அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது. அதே போல நகராட்சியில் பணியிடங்களை நிரப்பும் போது நிர்வாக செலவினம் 49 சதவீதத்திற்குள் உள்ளதென உள்ளாட்சி தணிக்கைத்துறையில் சான்று பெற வேண்டும் என்ற விதியுள்ளது. ஆனால் கடையநல்லூர் நகராட்சியில் சான்று பெறப்படவில்லை. அத்துடன் அரசின் பல்வேறு துறைகளில் தடையின்மை சான்று பெற வேண்டும் என்ற விதியும் உள்ளது. ஆனால் இந்நகராட்சியில் அந்த விதியும் கடை பிடிக்கப்படவில்லை. பணி நியமனத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது. எனவே மாண்பமை உயர்நீதி மன்றம் மற்றும் அரசின் உத்தரவுகளை கடை பிடிக்காமல் முறைகேடாக பணி நியமனம் செய்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார்.

2. இம்முறைமன்ற நடுவ 03.11.2021 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் மனுதாரர் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன், கடையநல்லூர் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு 12.11.2021 அன்று நடைபெறும் விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது.

12.11.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன் மற்றும் எதிர்மனுதாரர் திருமதி. சூ.மு.பாரிஜான் ஆகியோர் நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலங்களை இம்முறைமன்றத்தில் பதிவு செய்தனர்.

மனுதாரர் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன் தனது வாக்குமூலத்தில் கடையநல்லூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர், இளநிலை உதவியாளர் போன்ற காலிப்பணியிடங்களை நிரப்புவதில் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளன. வழிகாட்டுதல்களின்படி இப்பணியிடங்கள் முறையாக நிரப்பப்படவில்லை. மேலும், காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து முறையாக விளம்பரமும் செய்யப்படவில்லை. எனவே, மேற்கண்ட நகராட்சியில் காலிப்பணியிடங்களை நிரப்புவதில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து விசாரித்து, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக, என்னால் இம்முறைமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள 12.11.2021 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரத்தையே எனது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தில் பதிவு செய்திடுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

3. கடையநல்லூர் நகராட்சி ஆணையராக பொறுப்பு வகித்த திருமதி.சூ.மு.பாரிஜான் இம்முறைமன்றத்தில் 12.11.2021 அன்று நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை இம்முறைமன்றத்தில் பதிவு செய்துள்ளார்:-

கடையநல்லூர் நகராட்சியில் ஏற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு முறையாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் பெறப்பட்டது. அதே போன்று மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் நாளேட்டில் விளம்பரம் செய்து அதன்மூலமும் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. காலிப்பணியிடங்களை நிரப்பிட நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்றும், அரசு வழிகாட்டுதல்களின்படியும் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து உரிய தடையின்மைச் சான்றும் பெறப்பட்டுள்ளது என்றும், அரசு வழிகாட்டுதல்களின்படியே காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்றும், மனுதாரர் தனது புகாரில் கூறியவாறு எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்நேர்வு தொடர்பான எனது 11.11.2021 நாளிட்ட கடிதம் மற்றும் அதன் இணைப்புகளில் உள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவுசெய்திடுமாறும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். காலிப்பணியிடங்களை நிரப்பிட பெறப்பட்ட பட்டியலில் உள்ள நபர்களுக்கு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள நகராட்சி அலுவலகத்தால் கடிதம் அனுப்பப்பட்டது என்றும், அதனை அவர்கள் பெற்றுக்கொண்டதற்கான அட்டையின் (Acknowledgemet) நகல்களை இம்முறைமன்றத்தில் இன்னும் 10 நாட்களில் சமர்ப்பிக்கிறேன் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

4. இந்நேர்வு தொடர்பாக மேலும் சில விவரங்கள் மற்றும் ஆவணங்களை 25.11.2021 அன்று நடைபெறும் விசாரணையில் நேரடியாக ஆஜராகி சமர்பிக்குமாறு கடையநல்லூர் நகராட்சி உதவியாளர் திருமதி.எம்.எம்.அல்லி பாத்திமா என்பவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது:-

மேற்கண்ட கடையநல்லூர் நகராட்சி உதவியாளர் திருமதி.எம்.எம்.அல்லிபாத்திமா என்பவர் 25.11.2021 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை இம்முறைமன்றத்தில் பதிவு செய்துள்ளார்.

கடையநல்லூர் நகராட்சியில் ஏற்பட்ட இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், மின்கம்பி உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் போன்ற காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு 85 பெயர்கள் கொண்ட பெயர் பட்டியல் தொழில் துறையிலிருந்து 15.12.2019 அன்று பெறப்பட்டது. அதேபோன்று கடையநல்லூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர் நீங்கலாக மேற்கண்ட காலிப் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு எல்காட் நிறுவனத்திடமிருந்து 32 பெயர்கள் கொண்ட பட்டியல் 11.02.2019 அன்று பெறப்பட்டது. துப்புரவுப் பணியாளர் பணியிடத்தை நிரப்புவதற்கான தடையில்லா சான்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டது. மேற்கண்ட பட்டியல் அனைத்து தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கும் பதிவு அஞ்சல் மூலம் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டு ஒப்புகை சீட்டும் நகராட்சி அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

மேலும், துப்புரவு பணியாளர் பணியிடம் தவிர்த்து மற்ற பணியிடங்களுக்கு, எல்காட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 32 பேர்களுக்கும் ரிஜிஸ்டர் தபாலில் அழைப்புக் கடிதம் அனுப்பியதில் 8 பேரிடமிருந்து ஒப்புகை சீட்டும், குறிப்பிட்ட முகவரியில் அழைப்புக் கடிதம் சென்று சேராததால் 12 அழைப்புக் கடிதங்களும் திரும்ப பெறப்பட்டுள்ளது. மேற்கண்டஒப்புகை சீட்டுகளின் நகல்களை முறைமன்றத்தால் சரி பார்த்ததில் எல்காட் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலின் வரிசை எண்.5-ல் உள்ள எஸ்.திலகவதி, வரிசை எண்.9ல் கண்டுள்ள சி.உமாதேவி போன்றோரிடமிருந்து ஒப்புகை சீட்டு பெறப்பட்ட விவரத்தை என்னால் அளிக்க இயலவில்லை. ஆனால் மேற்கண்ட இருவருக்கும் பதிவு அஞ்சலில் 06.06.2019 அன்று அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டதன் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

அதே போன்று கடையநல்லூர் நகராட்சியில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு தொழிற்துறையிலிருந்து 85 பேர் கொண்ட பட்டியல் பெறப்பட்டது. அழைப்புக் கடிதம் அனுப்பியதில், 41 பேரிடமிருந்து ஒப்புகை சீட்டு பெறப்பட்டுள்ளது. 36 அழைப்புக் கடிதங்கள் திரும்பியுள்ளது (Returned). மேற்கண்ட ஒப்புகை சீட்டுகளின் நகல்களை முறைமன்றத்தால் சரிபார்த்ததில், வரிசை எண்.45ல் கண்டுள்ள திரு.நாகராஜன் மற்றும் வரிசை எண்.46ல் உள்ள திரு.ஜி.குணசேகரன் போன்றோரின் ஒப்புகை சீட்டுக்கள் என்னால் இம்முறைமன்றத்தில் அளிக்கப்பட்டது.

ஒப்புகை சீட்டின் நகல்கள், தொழிற்துறை மற்றும் எல்காட் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கடிதங்களின் நகல் விண்ணப்பதாரர்களுக்கு ரிஜிஸ்டர் தபாலில் அழைப்புக் கடிதம் அனுப்பிய விவரம் ஆகியவற்றை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரின் வாக்குமூலம், கடையநல்லூர் நகராட்சி உதவியாளரின் வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையாரால் அளிக்கப்பட்ட 15.09.2021 நாளிட்ட அறிக்கை மற்றும் ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

கடையநல்லூர் நகராட்சியால் சமர்பிக்கப்பட்ட பதிவு அஞ்சல் செய்தமைக்கான நகல்கள் மற்றும் ஆவணங்கள், நகராட்சியால் திரும்பப் பெறப்பட்ட அழைப்பாணைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் கடையநல்லூர் நகராட்சியில் ஏற்பட்ட இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், மின்கம்பி உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் போன்ற பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் பதிவு அஞ்சல் மூலம் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது தெரியவருகிறது.

- அரசு வழிகாட்டுதல்களை கடைப்பிடித்தும், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பின்படி நகராட்சி, நாளிதழ்களில் விளம்பரம் செய்தும், அரசு வழிகாட்டுதலை பின்பற்றியும் தொழில் துறை, எல்காட் நிறுவனம் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியல் ஆகியவற்றை கொண்டு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

- மேலும் துப்புரவு பணியாளர் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது.

- மேற்கண்ட பெயர் பட்டியல் உள்ளவர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டு அதன் ஒப்புகை சீட்டுகள் பெறப்பட்டதாக தெரிவித்த நிலையில், எல்காட் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலின் வரிசை எண்.5-ல் உள்ள எஸ்.திலகவதி, வரிசை எண்.9ல் கண்டுள்ள சி.உமாதேவி போன்றோரிடமிருந்து ஒப்புகை சீட்டு பெறப்பட்ட விவரத்தை அளிக்க இயலவில்லை. ஆனால் மேற்கண்ட இருவருக்கும் பதிவு அஞ்சலில் 06.06.2019 அன்று அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டதன் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

- அதே போன்று தொழிற்துறையிலிருந்து 85 பேர் கொண்ட பட்டியல் பெறப்பட்டது. அழைப்புக் கடிதம் அனுப்பியதில், 41 பேரிடமிருந்து ஒப்புகை சீட்டு பெறப்பட்டுள்ளது. 36 அழைப்புக் கடிதங்கள் திரும்பியுள்ளது, ஒப்புகை சீட்டுகளை பரிசீலனை செய்ததிலும் மற்றும் நிகழ்வுகளிலிருந்தும் கடையநல்லூர் நகராட்சியில் காலிபணியிடங்களை நிரப்பும்போது எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பது தெளிவாகிறது.

எனவே மேற்கண்ட கடையநல்லூர் நகராட்சியில் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், மின்கம்பி உதவியாளர், துப்புரவு பணியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் போன்ற பணியிடங்கள் அரசின் வழிகாட்டுதல்களை, பின்பற்றியும் வேலை வாய்ப்பு அலுவலகம் தொழில்துறை மற்றும் எல்காட் நிறுவனம் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட பட்டியலின்படியே மேற்கண்ட பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இப்பட்டியல்கள், பெயர்கள், அனுப்புகைப் பதிவேடு ஆகியவை நேரடியாக மன்றத்தால் ஆராயப்பட்டு, பரிசீலிக்கப்பட்டது. இந்நேர்வில் எவ்வித முறைகேடு நடந்திடவில்லை என இம்முறைமன்றம் கருதுவதால் இம்மனு மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன்,
3/9, பவுண்டு கீழத்தெரு,
மேலக்கடையநல்லூர்,
கடையநல்லூர் 627 751.

2) நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

20/07/22

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032